

திருபுவனை ஏரியில் இருந்து வெளியேறிய உபரிநீர் சின்னபேட் குடியிருப்புக்குள் புகுந்துள்ள காட்சி.

# திருபுவனை ஏரி நிரம்பி ஊருக்குள் புகுந்த மழை வெள்ளம்

## வீடுகளை சூழ்ந்ததால் பொதுமக்கள் அவதி

திருபுவனை, டிச.3-

திருபுவனை ஏரி நிரம்பி ஊருக்குள் புகுந்து வீடுகளை வெள்ளம் சூழ்ந்ததால் பொதுமக்கள் அவதிக்குள்ளாகினர்.

### உபரிநீர் வெளியேறியது

வங்கக் கடலில் உருவான பெஞ்ஜல் புயல் காரணமாக புதுச்சேரி நகரம் மற்றும் கிராமப்புறங்களில் கடந்த 30 மற்றும் 1-ந் தேதிகளில் மழை வெளுத்து வாங்கியது. வரலாறு காணாத அளவில் 54 செ.மீ. பெய்த மழையால் கிராமப்புறங்களில் உள்ள ஏரி, குளங்கள் நிரம்பி வழிகின்றன.

திருபுவனை சுற்றுப்பகுதியில் பெய்த கனமழையால் திருபுவனை ஏரி நிரம்பியது. உபரிநீர் வெளியேறும் மதகு பகுதியில் உள்ள கால்வாய் தூர்வாராப்படாததால் அடைப்பு ஏற்பட்டு இருந்தது. இதனால் அதிக அளவில் வெளியேறிய உபரிநீர், போக்கு மாறி அங்குள்ள சின்னப்பேட் பகுதிக்குள் புகுந்தது.

### வெளியேறிய மக்கள்

இதனால் அதிர்ச்சி அடைந்த மக்கள் வீட்டை விட்டு அவசர அவசரமாக வெளியேறினர். 20-க்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. மேலும் சில வீடுகளை தண்ணீர் சூழ்ந்துள்ளதால் அவர்கள் வெளியே வரமுடியாமல் தவித்து வருகின்றனர்.

இதுபற்றி தகவல் அறிந்த பொதுப்பணித்துறை நீர்பாசன அதிகாரிகள் திருபுவனை ஏரி மதகு பகுதிக்கு விரைந்து சென்றனர். அங்கு 2 பொக்லைன் எந்திரங்கள் வரவழைக்கப்பட்டது. அவற்றின் உதவியுடன் உபரிநீர் செல்லும் கால்வாயை தூர்வாரி, அதன் வழியாக உபரிநீர் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது.

இருப்பினும் ஏரியில் இருந்து அதிகபடியான உபரிநீர் செல்வதால் குடியிருப்பு பகுதியில் சூழ்ந்துள்ள தண்ணீர் வடிவதில் சிக்கல் உள்ளது.

திருபுவனையில் சின்னபேட் நாகாத்தம்மன் கோவில் வழியாக மதகடிப்பட்டு செல்லும் சாலையில் மின்கம்பம் ஒன்று சாய்ந்து குறுக்காக விழுந்தது. இதையடுத்து அந்த பகுதியை சேர்ந்த இளைஞர்கள் வாகனங்களை தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பினர். மேலும் தகவல் அறிந்ததும் மின்துறை ஊழியர்கள் விரைந்து வந்து மின்கம்பத்தை நடும் பணியில் ஈடுபட்டனர். இதன் காரணமாக அந்த பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

தினமலர் தேதி: 3-12-2024